
# வானவில்

# VAANAVIL

இதழ் - 96
மார்கழி 2018

ISSUE – 96
DECEMBER 2018


# அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பொறுப்பை மக்களிடம் விட வேண்டும்!




**இ**லங்கையில் சுமார் இரண்டு மாதங்கள் நீடித்த அரசியல் குழப்ப நிலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் வழுங்கிய தீர்ப்புடன் முடிவுக்கு வந்துவிட்டது என்றதொரு தோற்றப்பாட்டை சில அரசியல் கட்சிகளும் பெரும்பாலான ஊடகங்களும் உருவாக்கி வருகின்றன.

ஆனால் உண்மை அதுவல்ல. ஒரு பெரும் யுத்தத்தில் ஒரு கள நடவடிக்கைதான் (One Field Operation) முடிந்துள்ளது என்பதுதான் கள நிலவரம்.

ஏனெனில், இந்த விடயம் ஜனாதிபதி மைத்திரி நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் சம்பந்தப்பட்டது மட்டுமானது அல்ல. அதனால் அது 225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் பல கோடி ரூபா பெறுமதியில் ஆட்களை விலைக்கு வாங்கி பெரும்பபான்மையை நிரூபிப்பதாலோ அல்லது 2 கோடி சனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் ஏழு நீதிகள் வழங்குகின்ற ஒரு தீர்ப்பினாலோ முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை என்பதே உண்மை.

அதற்குக் காரணம், நாட்டின் உண்மையான எஜமானர்களாகவும், ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகவும், தமது உடன் பிறப்பான இறையாண்மையைப் பிரயோகிப்பவர்களாகவும் திகழ்கின்ற இலட்சோப இலட்சம் மக்களின் கருத்துக்களை கணக்கில் எடுக்காமல், விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் நாடாளுமன்றத்தினதும், சட்டப் புக்ககங்களினதும் தயவில் தங்கி நின்று எடுக்கும் முடிவுகளையே அதிகார வர்க்கம் முதலும் முடிவுமாகக் கொள்ளும் ஒரு போக்கு முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது.

முதலில் இந்த அரசியல் நெருக்கடி எதனால் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தால்தான் நோய்க்கான வைத்தியத்தைச் செய்ய முடியும்.

அப்படிப் பார்த்தால் 2015 ஜனவரி 8இல் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் பின்னணியுடன் எதிரெதிரான கொள்கைகளைக் கொண்ட இரண்டு அணிகள் இணைந்து ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ததில்தான் இந்தக் குழப்பம் ஆரம்பமாகிறது. நாட்டு நலன் கருதி இவ்வாறான ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தால் அதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படியில்லாமல் இந்த சமுத்திரப் பிராந்தியத்தில் தமது வல்லாதிக்க நோக்கங்களை ஈடேற்றுவதற்காகவே சர்வதேச – பிராந்திய வல்லாதிக்க சக்திகள் அந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டன.

அடுத்ததாக, அதே வருடம் ஒகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அதே எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளும் சேர்ந்து அமைத்த ‘நல்லாட்சி’ அல்லது ‘தேசிய அரசாங்கம்’ என்பது இன்னொரு பொருந்தாக் கலியாணமாகும். ஜனாதிபதித் தேர்தலின் தொடர்ச்சியாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் இலங்கை மக்களின் உண்மையான நலன்களைப் புறந்தள்ளி மேற்கொள்ளப்பட்ட அரசியல் சதி சூழ்ச்சி நடவடிக்கைகளாகும். இந்த சூழ்ச்சியில் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க…**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# கீழ் வெண்மணி படுகொலைகள் நிகழ்ந்து 50 ஆண்டுகள்

*1968* ஆம் ஆண்டு டிசம்பர் 25ந் திகதி, உலகெங்கும் கிறிஸ்மஸ் பண்டிகை நாள் கொண்டாடப்படுகின்றது. அன்று தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் நாகப்பட்டினம் மாவட்டம் (அந்தக் காலகட்டத்தில் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டமாக இருந்தது), கீழ் வெண்மணி எனும் சின்னஞ்சிறிய கிராமத்தில், ஓர் ஓலைக் குடிசைக்குள் வைத்து குழந்தைகளும் பெண்களும் முதியவர்களுமாக 44 பேர் எரித்துக் கொல்லப்படுகின்றனர். இவர்களில் இரண்டு கர்ப்பிணிகள் உள்ளிட்ட 20 பேர் பெண்கள், 19 பேர் 13 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர் உட்பட 5 பேர் ஆண்கள். கொல்லப்பட்டவர்கள் அனைவருமே பொருளாதாரத்தாலும் சாதிய அமைப்பாலும் ஒடுக்கப்பட்டவர்கள். கூலி உயர்வாக இரண்டு மரக்காலோடு ஒரு படி நெல்லை உயர்த்திக் கேட்டுப் போராடினார்கள் என்பதற்காகவே இவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்தச் சோகச் சம்பவம் நடந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது.

தஞ்சாவூர் நிலச்சுவான்தாரர்கள், தாழ்த்தப்பட்ட மக்களை பண்ணையாள் முறை கட்டமைப்பில் வைத்திருந்தார்கள். இதில் கூலி வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் பண்ணை அடிமைகளாக வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் உரிமையும் மறுக்கப்பட்டிருந்தது. நிலங்களில் செய்யும் வேலைகளுக்கு கூலியாக 1968–வரையிலும் இரண்டு மரக்கால் நெல்லே கூலியாக கொடுக்கப்பட்டது. மேலும் வேலை நேரத்தின் போது கடுமையான தண்டனைகளாலும் அவர்கள் வதைக்கப்பட்டார்கள். வேலை நேரத்தில் சுறுசுறுப்பாக இல்லாதிருந்தால் உடம்பில் இரத்தம் வரும் அளவுக்கு சாட்டைகளாலும், சவுக்குத் தடிகளாலும் தண்டிக்கப்பட்டனர். மாட்டுச் சாணியை தண்ணீருடன் கரைத்துக் குடிக்கச் சொல்லும் தண்டனையும் வழங்கப்பட்டது.

1960 இற்குப் பின்னர் அப்போதைய தமிழகத்து கம்யூனிஸ்ட் தலைவர்கள் தஞ்சாவூர் விவசாயத் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அத்துடன் 'விவசாயத் தொழிலாளர்கள் சங்கம்' ஒன்றினை ஏற்படுத்தி விவசாயத் தொழிலாளர்களை ஒன்றிணைத்தனர். சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் இராஜாஜி 'தஞ்சை மாவட்ட விவசாயிகளை கம்யூனிஸ்ட் என்கிற பேய் பிடித்திருக்கிறது' என்று வர்ணித்ததும் அக்காலகட்டத்தில் தான்.

கீழ் வெண்மணியில் விவசாயத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்ததும், கூலி கேட்டு போர்க்குரல் உயர்த்தியதும் நிலச்சுவான்தாரர்களுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. தமக்கு கீழே கைகட்டி வாய் பொத்தி வேலை செய்தவர்கள் இன்று நிமிர்ந்து கேள்வி கேட்க ஆரம்பித்தது ஆதிக்க வர்க்கத்தினரால் ஜீரணிக்க முடியவில்லை. அவர்களை நெல் அறுக்க வர வேண்டாம் என்று உத்தரவு போட்டார்கள். அறுவடைக்கூலி உயர்த்திக் கேட்டதை இரிஞ்சியூர் (வெண்மணிக்கு அருகிலுள்ள ஊர்) கோபாலகிருஷ்ண நாயுடு தலைமையிலான நெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. விவசாய தொழிலாளர் சங்கம் இருப்பதால் தான் விவசாய தொழிலாளிகள் துணிந்து நிற்கிறார்கள் என்று சங்கத்தை ஒழித்துக் கட்ட நினைத்தனர். 25.12.1968 அன்று மாலை 6 மணியளவில் கீழ் வெண்மணிக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களை நிலச்சுவான்தாரர் ஒருவர் வீட்டில் கட்டி வைத்து அடித்து உதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கேள்விப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் ஒன்றுகூடி, நிலச்சுவான்தார் வீட்டை முற்றுகையிட்டு இரு தொழிலாளர்களையும் விடுவித்தனர். அப்போது எழுந்த மோதலில் நிலச்சுவான்தாரர்களின் அடியாட்களில் ஒருவன் இறந்தான். இந்தத் தகவல் நிலச்சுவான்தாரர்களை கோபத்தின் உச்சிக்கே கொண்டுபோனது.

அன்றிரவு 9 மணியளவில் நாட்டுத் துப்பாக்கிகளுடனும் அரிவாள்களுடனும் கோபாலகிருஷ்ண நாயுடுவின் அடியாட்கள் கீழ் வெண்மணிக்குள் புகுந்தார்கள். விவசாயத் தொழிலாளர்களை கண்டபடி தாக்கினார்கள். பதிலுக்குத் தொழிலாளர்களும் திருப்பித் தாக்கினார்கள். எனினும் நில உடமையாளர்களின் அடியாட்கள் துப்பாக்கியால் சுட்டதில், குழந்தைகளும் பெண்களுமாகப் பலர் தலைதெறிக்க ஓடினார்கள். அவ்வாறு ஓடியவர்களில் ஒருபகுதியினர் நடுத்தெருவொன்றில் கடைசியாக இருந்த 'ராமையன்' என்பவரின் குடிசைக்குள் ஒளிந்தார்கள். பன்னிரண்டடி நீளம், ஏழடி அகலமுள்ள அந்த மண் குடிசையில் 48 பேர் வரையில் அடைந்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. கதவு அடைக்கப்பட்டிருந்த நிலையில், கோபாலகிருஷ்ண நாயுடுவின் அடியாட்களால், அக்குடிசைக்குத் தீ வைக்கப்பட்டது. நான்கு பேரால் மாத்திரமே அந்தக் குடிசையிலிருந்து உயிரோடு தப்பிக்க முடிந்தது.

கீழ் வெண்மணி படுகொலைச் சம்பவத்தில் மொத்தமாக 106 பேர் கைதானார்கள். "இதை சாதிய மோதல்" என்று காவற்துறை முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டது. "அதிக நிலங்களைச் சொத்துக்களாக வைத்திருப்பவர்கள், இப்படியொரு செயலைச் செய்திருக்க வாய்ப்பில்லை என சொல்லி, அவர்கள் குற்றவாளிகள் அல்ல..." என்று 1973 ஏப்ரல் 6 ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பட்டு, கோபாலகிருஷ்ண நாயுடு உட்பட குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலையை நேரில் பார்த்த சிறுவன் ஒருவனால் 12 வருடங்கள் கழித்து கோபாலகிருஷ்ண நாயுடு வெட்டிக் கொலை செய்யப்பட்டார். ராமையாவின் குடிசை இருந்த இடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நினைவில்லம் ஒன்றினை அமைத்து வருடாவருடம் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றது.

இத்தனை உயிர்களை பலி வாங்கிய சாதிவெறி இன்னும் கீழ் வெண்மணியை மட்டுமல்ல, தமிழ் சமூகத்தை விட்டும் நீங்கவில்லை. பல்லாயிரம் உயிர்களையும், உரிமைகளையும், உடைமைகளையும் சூறையாடிய சாதிவெறி தமிழ்ச் சமூகத்தில் சாதி ஆணவப்படுகொலை போன்ற புதுப்புது பரிமாணங்களோடு இன்றளவும் வேரூன்றி நிற்கின்றது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# பழையபடி தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேதாளம் முருங்கை மரத்தில்!



தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை தனது ஏகாதிபத்திய சார்பு விசுவாசத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பு வர்க்க விசுவாசத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசு அமைவதற்கு 14 தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுத்து மூல ஆதரவினை வழங்கியதன் மூலம் இது வெளிப்பட்டிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதலாக, தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கிய எல்லாத் தமிழ் தலைமைகளுமே ஏதோ ஒரு வகையில் பிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவுடன் கைகோர்த்தே செயல்பட்டு வந்திருக்கின்றன. எனவே தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து கொண்டமை ஒன்றும் ஆச்சரியகரமான விடயமல்ல. ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், முன்பு இருந்த தமிழ் தலைமைகள் மூடி மறைத்து ஐ.தே.கவுடன் செய்த கொடுக்கல் வாங்கல்களை இப்பொழுதுள்ள தலைமை எந்தவித தயக்கமுமின்றி, வெட்கமுமின்றி பகிரங்கமாகவே செய்கின்றது.

அதற்குக் காரணம், தற்போதைய தமிழ் தலைமையும் முன்னைய ஐ.தே.க. சார்புத் தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சி என்பது ஒருபுறமிருக்க, தற்போது தலைமையில் இருக்கும் இரா.சம்பந்தன் திரிகோணமலையில் பிரபல்யமான ஐ.தே.க. சார்பு குடும்பம் ஒன்றைச் சார்ந்தவராக இருப்பதும், அவருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கும் எம்.ஏ.சுமந்திரன் நீண்டகால ஐ.தே.க. நண்பர் என்பதுமாகும். (சுமந்திரனை ஐ.தே.கதான் திட்டமிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் அனுப்பியதாகவும் ஒரு பலமான அபிப்பிராயம் உண்டு)

தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவே தாம் ஐ.தே.க. அரசை ஆதரிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமை கூறுகிறது. முன்னரும் கூறியது. 2015 ஜனவரி 08இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் அதேயாண்டு ஒகஸ்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐ.தே.க. தலைமையிலான வேட்பாளர்களை எந்தவிதமான நிபந்தனையும் இன்றி ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதன் பின்னரான மூன்றரை வருட காலத்தில் ஐ.தே.க. தலைமையிலான அரசை எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்துகொண்டு தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளது. இவ்வளவத்தையும் செய்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஒன்றைத்தன்னும் ஐ.தே.க. அரசைக் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பால் நிறைவேற்ற முடிந்ததா?

## சுப்பராயன்

சுதந்திர இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது, மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கெதிரான இனவன்முறைகளை முன்னின்று நடத்தியது, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1957இல் செய்யப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தத்தையும், 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், 2000ஆம் ஆண்டில் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தப்பட விடாமல் குழப்பியது, அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றியது என்பன ஐ.தே.க. காலத்துக்குக்காலம் செய்த தமிழர் விரோத நடவடிக்கைகளில் சில.

ஐ.தே.கவின் இந்த தமிழர் விரோத பழைய வரலாறுகள் ஒருபுறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் பதவிக்கு வந்த தற்போதைய ஐ.தே.க. அரசு, கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் - அவற்றில் சில உடனடிப் பிரச்சினைகளாக இருந்தபோதிலும் - தீர்த்து வைத்ததா என்றால், பதில் "இல்லை" என்பதுதான். அப்படியிருக்க, எப்படி கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை ஏதுமின்றி ஐ.தே.க. அரசு அமைய ஆதரவளித்ததோ, அவ்வாறே தற்போதும் ஐ.தே.க. அரசு அமைவதற்கு நிபந்தனை ஏதுமின்றி எழுத்து மூல ஆதரவை அளித்துள்ளது.

---

ஒரு நபர் தெளிவாக தவறாக இருக்கிற பொழுது அவர் நன்கு பரிச்சயமானவர், சக நகரவாசி, பள்ளித் தோழர், நெருக்கமான நண்பர், நேசிக்கப்படுகிறவர், பழைய சகா அல்லது பழைய கீழ்ப்பணியாளர் என்பதால் மன அமைதிக்காகவும் நட்புறவிற்காகவும் விஷயங்களை நழுவ விடுதலும் கொள்கைரீதியாக வாதிடுவதிலிருந்து தவிர்த்தலும் தாராளவாதம் ஆகும்.

**— மா சே துங்**

தமிழ்த் தலைமை தமிழ் மக்களுக்குச் செய்துள்ள இந்தத் துரோகம், வரலாற்றில் இதுதான் முதல் தடவை அல்ல.

1965இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்றுக்காவது ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கவில்லை. ஆனால், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட, ஐக்கிய தேசியக் கட்சி சற்றுக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருந்தது. (2015 பொதுத் தேர்தல் முடிவுகள் போல) தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவில்லாமலும் ஐ.தே.கவால் வேறு சில சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருக்க முடியும். ஆனால் நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. அரசாங்கம் ஏதாவதொரு மசோதாவைக் கொண்டு வந்து அதை பிரதான எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்து, அதனுடன் தமிழரசு – தமிழரசுக் கட்சிகளும் சேர்ந்து எதிர்த்தால் அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டு அரசு கவிழும் நிலை இருந்தது.

ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அவ்வாறானதொரு நிலை இருக்கவில்லை. தமிழ் கட்சிகள் இரண்டும் ஆதரித்தால் மட்டுமே அக்கட்சியால் ஆட்சியமைத்திருக்க முடியும். இந்த நிலை அன்றைய காலகட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைமை சொல்லி வந்த, 'பிரதான கட்சிகளுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத போது நிபந்தனையுடன் பேரம்பேசி ஆட்சியமைக்க ஆதவளிப்பதன் மூலம் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்' என்ற தந்திரோபாயத்தைக் கையாள்வதற்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாக எல்லோராலும் பார்க்கப்பட்டது.

ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கும்படி சுதந்திரக் கட்சியின் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் அழைப்பும் விடுத்தார். தமிழ் கட்சிகள் முன்வைக்கும் நிபந்தனைகள் சிலவற்றை ஏற்பதற்கும் தயாராக இருந்தார்.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றைத்தன்னும் தீர்ப்பதற்கு கிடைத்த அந்த அரிய சந்தர்ப்பத்தை தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இரண்டும் ஊதாசீனம் செய்துவிட்டு, ஐ.தே.க. கொடுத்த "மாவட்ட சபைகள் அமைக்கப்படும்" என்ற போலி வாக்குறுதியை ஏற்று ஐ.தே.க. அரசில் ஆர்.ஜீ.சேனநாயக்க, கே.எம்.பி.ராஜரத்தன போன்ற தீவிர சிங்கள இனவாதிகளுடன் இணைந்து ஐ.தே.க. தலைமையிலான ஏழுகட்சி கூட்டரசாங்கத்தில் இணைந்து கொண்டன. ஆனால், இறுதியில் ஐ.தே.க. வாக்குறுதி கொடுத்த மாவட்ட சபையைப் பெற முடியாமல் நான்கரை ஆண்டுகள் கழித்து தமிழரசுக் கட்சி அரசிலிருந்து வெளியேறியது.

தமிழரசுக் கட்சி அன்று தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொண்ட இந்தத் துரோகம் காரணமாகவும், தமிழரசுக் கட்சியும் அங்கம் வகித்த ஐ.தே.க. அரசாங்கம் தமிழர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகக் கொண்டு வந்த ஆள் அடையாள அட்டை மசோதாவை எதிர்த்துமே அன்று அக்கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வி.நவரத்தினம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். (ஆனால் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் அப்படியான கொள்கைப்பற்றுள்ள ஒருவரையாவது காண முடியவில்லை)

அதுமாத்திரமின்றி, தமிழரசுக் கட்சி செய்த இந்த இரண்டக வேலை காரணமாகவே, 1970இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தமிழ் கட்சிகளின் தயவில்லாமல் ஒரு ஆட்சியை அமைக்கும் வண்ணம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிக்கு நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர்.

ஏறத்தாழ 53 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த அரசியல் நிலைமை போன்ற ஒரு நிலை அண்மையிலும் உருவாகியது. 2018 ஒக்டோபர் 26இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பதவி நீக்கம் செய்த பின்னர், நாடாளுமன்றத்தில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ரணில் தரப்பினரும், மகிந்த தரப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை நாடினர்.

ரணில் தரப்பினரை விட, மகிந்த தரப்பினருக்கு சற்றுக் குறைவான நாடாளுமன்ற ஆசனங்கள் இருந்ததால், அவர்கள் ஆட்சியமைக்க ஆதரவு வழங்குவதாக இருந்தால், வலுவான கோரிக்கைகளை முன்வைத்து பேரம் பேசும் வாய்ப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தது. ஆனால் தமிழ்த் தலைமை இந்தத் தடவையும் அந்த வாய்ப்பை ஊதாசீனப்படுத்தி, ஐ.தே.க. மீது இருந்த வர்க்க பாசம் காரணமாகவும், ஏகாதிபத்திய எஜமானர்களின் ஆலோசனைப்படியும் செயற்பட்டு, ரணில் தலைமையிலான ஐ.தே.க. அரசு அமைய ஆதரவு கொடுத்துள்ளது.

இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கு தமிழ் மக்களின் நலன்களை விட, தமது வரக்க சகாக்களான ஐ.தே.கவினதும், ஏகாதிபத்திய எஜமானர்களினதும் நலன்களே முக்கியம் என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியுள்ளது. எதிர்காலத்திலும் தமிழ் மக்களுக்கு இந்த வகையான பிற்போக்கு இனவாத சக்திகள் தலைமைதாங்கும் வரையும் இவ்வாறானதொரு நிலையே தொடரப்போகின்றது.

இங்கே விழித்துக் கொண்டு செயற்பட வேண்டியவர்கள் தமிழ் மக்கள்தான். செய்வார்களா? அல்லது தொடர்ந்தும் கண்ணை மூடிக்கொண்டு இந்த வங்குரோத்துப் பாதையில் சென்று செத்து மடியப் போகிறார்களா என்பதே அவர்கள் முன்னாலுள்ள கேள்வி.

## மன்னாரில் மீட்கப்படும் எலும்புக்கூடுகள் யாருடையவை?



**இலங்கையின்** வடபகுதியிலுள்ள மன்னார் நகரின் நுழைவாயிலில் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வில் இதுவரை 260 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன!

அண்மையில் கண்டெடுக்கப்பட்ட இரு மனித எலும்புக்கூடுகளின் கால்களில் சங்கிலிகள் பிணைக்கப்பட்டிருப்பதனைக் காண முடிந்துள்ளது. இதன் மூலம் இவ்விருவரும் சங்கிலிகளால் கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் எனக் கருதப்படுகிறது.

இந்த எலும்புக்கூடுகள் இலங்கையில் நடைபெற்ற 30 வருட உள்நாட்டுப் போர்க்காலத்தில் இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழர்களுடையதாக

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கவில்லை!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிதாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிவிப்பால் ஜனநாயகம் செத்துவிட்டது என்று கூப்பாடு போட்ட ஒரே அரசியல் 'இனத்தை'ச் சேர்ந்த ஐ.தே.க., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட்ட சில கட்சிகளும் அமைப்புகளும் அதற்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தன.

வழக்கை விசாரித்த 7 பேர் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அரசியல் சாசனப்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தது தவறானது என ஏகமனதாகத் தீர்ப்பளித்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு தடை போட்டனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள சில சக்திகள் "ஆகா, இலங்கை நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட்டு ஜனநாயகத்தைப் பாதுகாத்துவிட்டது" என தலையின் மேல் தூக்கி வைத்துக் கொண்டாடி வருகின்றனர்.

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்னர் அதுபற்றி மக்கள் மத்தியில் பல விதமான கருத்துக்கள் நிலவி வந்தன.

இதில் ஆழமான அரசியல் பார்வையும் அனுபவமும் கொண்ட ஒரு சிலர் மட்டும் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள மாதரியான ஒரு தீர்ப்புதான் வரும் என மிகவும் திடமாக நம்பினர். அவர்களிலும் ஒரு சாரார் அரசியல் சாசனப்படி நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இல்லை என்ற அடிப்படையில் அந்த முடிவுக்கு வந்திருந்தனர். இன்னொருசாரார், ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிராக பல அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளும் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாலும், மேற்குலக நாடுகள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான அழுத்தங்களை வெளிப்படையாகப் பிரயோகித்து வந்ததாலும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் அதன் தாக்கத்துக்கு உட்பட்டே தீர்ப்பை வழங்குவர் எனக் கருதினர்.



மற்றொரு பிரிவினர், தீர்ப்பு எப்படி அமைந்தாலும் ஏழு பேர் கொண்ட நீதிபதிகள் ஒருமனதாக இல்லாமல் பிரிந்து நின்று தீர்ப்பை வழங்குவர் என நம்பி இருந்தனர். ஜனநாயகத்தில் அப்படி நடப்பதுதான் வழமை என்ற கருத்தால் அவர்கள் அந்த நிலைப்பாட்டுக்கு வந்திருந்தனர்.

ஆனால் நாட்டின் உண்மையான எஜமானர்களான பொதுமக்கள் வேறொரு கருத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்ததை சரியென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என நம்பி இருந்தனர்.

அப்படி அவர்கள் நம்பியதற்கு பல காரணங்கள் இருந்தன.

### பிலிப்பையா

முக்கியமான காரணம், 2015 ஓகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்கோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கோ ஆட்சியமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மை கிட்டியிருக்கவில்லை. எனவே ரணில் தலைமையிலான ஐ.தே.முன்னணியும், ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான ஐ.ம.சு.கூட்டமைப்பும் இணைந்து 'நல்லாட்சி' என்ற பெயரில் கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்தன. அவர்கள் அவ்வாறு செய்ததிற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.

முன்னர் ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசை வீழ்த்துவதற்கு வெளிநாட்டு சக்திகளின் ஆசிர்வாதத்துடன், 2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நியமித்து அதில் வெற்றியும் பெற்றிருந்தனர். எனவே மகிந்த அணி மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கு அந்த அரசியல் ஐக்கியம் தொடர வேண்டியது தேவையெனவும் அவை கருதின.

ஆனால், மூன்றரை வருடங்களாக நடைபெற்ற 'நல்லாட்சி'யில் ஐக்கிய தேசியக் கட்சியே ஆதிக்கம் செலுத்தியது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் அதிகாரங்களையும் தன்னிச்சையாக தனது கைகளில் எடுத்துக்கொண்டு செயற்படத் தொடங்கினார். அதுமட்டுமின்றி, வழமையான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் சார்பு நிலைப்பாட்டுக்கு எதிராக ரணிலின் அரசு செயற்பட்டு, மக்களுக்கு மேல் ஏராளமான நெருக்கடிகளை ஏற்படுத்தியது. பொதுச் சொத்துகளை தனியார்மயப்படுத்தியது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட பலவிதமான ஊழல்களில் ஈடுபட்டது. இதன் காரணமாக முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு மக்களின் அனைத்துப் பிரிவினரும் தினசரி போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

2018 பெப்ருவரி 10 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் நாட்டு மக்களின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டியது. அந்தத் தேர்தலில் ஆளும் கட்சிகள் இரண்டும் படுதோல்வி அடைந்தன. மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிதாக உருவான சிறீலங்கா பொதுமக்கள் முன்னணி அமோக வெற்றியீட்டியது.

இதன் காரணமாக ஆட்சியின் இரு பங்காளிக் கட்சிகளுக்கிடையிலும் ஏற்கெனவே இருந்த விரிசல் ஆழமாகி மோதலாக உருவெடுத்தது. இந்தச் சூழ்நிலையில்தான் மக்களில் பெரும்பான்மையோரின் கருத்துக்கு செவிசாய்த்து 'நல்லாட்சி' அரசிலிருந்து தனது ஐ.ம.சு.கூட்டமைப்பை ஜனாதிபதி விலக்கி கூட்டரசாங்கத்துக்கு முடிவு கட்டினார். அதுமாத்திரமின்றி, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான மக்கள் விரோத, தேச விரோத அரசைக் கலைத்து, மகிந்த தலைமையில் தற்காலிக அரசொன்றை நியமித்தார். தற்காலிக அரசொன்றை அமைத்தாலும், அந்த அரசாலும் நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று கருதியதாலேயே, நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்கள் விரும்பும் புதிய அரசை மக்கள் தேர்தல் ஒன்றின் மூலம் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யத் தீர்மானித்தார்.

ஜனாதிபதியின் இந்த முடிவை நாட்டின் பெரும்பான்மையான மக்களும், மதத்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# பிணைமுறி மோசடி விவகாரம் பல்வேறு விடயங்கள் வெளியாகின

1,000 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமெனத் தெரிவிக்கப்படும் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி 2002ஆம், 2003ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளதாக, மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கண்டறிவதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் 21.12.2018 இல் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே, இந்த விடயங்கள் தெரியவந்தன.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்வதற்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற உத்தரவின்படி அவரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி இலங்கை அரசாங்கம் சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளபோதும் சிங்கப்பூர் அரசாங்கம் இதுவரையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிணைமுறி மோசடி தொடர்பாக தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக இதுவரையில் குற்றப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாதுள்ளமையால் அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரங்களை விரைவாக சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான முறைகேடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குப் பொய் சாட்சியளித்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் மற்றும் இந்த விசாரணையுடன் தொடர்புடைய சாட்சிகளை அழித்த குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இதுவரை தாமதமடைந்திருப்பதுடன், அவர்களுக்கெதிராக விரைவாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய வங்கி கொள்ளை தொடர்பில் வகை கூற வேண்டியவர்களுக்குரிய விசாரணைகளை நிறைவு செய்து, குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது தெரியவந்த மற்றுமொரு முக்கியமான விடயம் இந்த வழக்குகள் தொடர்பான சட்ட திருத்தத்தில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவால் இதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமை பற்றியும் தெரியவந்துள்ளது. மேலும், இந்தப் பாரிய நிதி மோசடி பற்றி சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவால் தடயவியல் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, 2018.01.18ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் ஒருவருட காலமாகியும் அந்த கணக்காய்வு இதுவரையில் மேற்கொள்ளப்படாமை பாரிய தவறாகும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் விளக்கினர்.

பிரதிவாதிகள் பயன்படுத்திய தொலைபேசிகளின் குரல் பதிவுகளில் இந்த விசாரணை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முக்கிய பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த குரல் பதிவுகள் நிபுணர்களால் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்திக் கண்டறிவதற்காக இதுவரையில் வெளிநாட்டுக்கு அனுப்பப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. மேற்படி விடயங்களின்படி, மத்திய வங்கி பிணைமுறி நிகழ்வுடன் தொடர்புடைய விசாரணைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு முடியாத வகையில் குறித்த நிறுவனங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது தெரியவந்துள்ளது.

இந்த அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டு, இந்த விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கும் உரிய காலப் பகுதியில் வழக்குத்தாக்கல் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்




தாமதமின்றி தடவியல் கணக்காய்வை ஆரம்பிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் மாதத்துக்கு ஒரு தடவை இந்த விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியின் தலைமையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்றை நடத்துவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

குறித்த விசாரணை நடவடிக்கைகளில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மத்தியவங்கி உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் பக்கச்சார்பற்ற முறையிலும் சுயாதீனமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது, நாட்டு மக்களின் நம்பிக்கையாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, மத்திய வங்கியின் பதில் கடமை புரியும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

**நன்றி: தமிழ் மிரர்**

சுய-திருப்தி என்பது படிப்பின் விரோதி. இந்தச் சுய-திருப்தி உணர்வை நம்மிடம் இருந்து நீக்கினால் ஒழிய, நாம் ஒன்றையும் உண்மையாகக் கற்க முடியாது. நம்மைப் பொறுத்த வரையில் "படிப்பில் தெவிட்டாமை" என்ற கண்ணோட்டத்தையும், பிறருக்கு "கற்றுக் கொடுப்பதில் சளையாமை" என்ற கண்ணோட்டத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும். **–மா சே துங்**

வேறொரு கோணம்:

# தமிழர் அரசியலில் மூன்றாவது அணி சாத்தியமா?



அரசியல் அரங்கில் மூன்றாவது அணி அமைப்பது பற்றி காலத்துக்காலம் பேசப்படுவது வழமை. இப்பொழுது இலங்கைத் தமிழ் அரசியல் அரங்கில் அப்படியொரு கலந்துரையாடல் மீண்டும் ஆரம்பமாகி இருக்கிறது. அதற்குக் காரணம் இலங்கை போன்ற பிரித்தானிய வெஸ்ற்மினிஸ்ரர் ஆட்சிமுறை நிலவும் நாடுகளிலே இருகட்சி ஆட்சிமுறை இருப்பதும், அந்த இரு கட்சிகளும் ஏதோ ஒருவகையில் ஒத்த தன்மையுடையனவாக இருப்பதால் அதிருப்தி அடையும் அரசியல் சக்திகள் மூன்றாவது வழியொன்றைத் தேடுவதும் காலத்துக்குக் காலம் நிகழ்ந்து வருகின்றமையுமாகும்.

இந்த மூன்றாவது அணி அமைப்பது சம்பந்தமாக இரு கேள்விகள் இருக்கின்றன. முதலாவது கேள்வி, அரசியல் ரீதியாக மூன்றாவது அணி அமைப்பது சரியானதா என்பது. இரண்டாவது கேள்வி அப்படி அமைப்பது சாத்தியமா என்பது. இந்த இரண்டு கேள்விகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதால், இந்த விடயம் குறித்துப் பொதுவாகவே ஆராயலாம்.

இயற்கை விஞ்ஞானமும் சரி, சமூக விஞ்ஞானமும் சரி, ஒரு பொருளில் அல்லது ஒரு விடயத்தில் எதிரும் புதிருமான இரண்டு அம்சங்களே இருக்கும் என நிறுவியுள்ளன. அதன் அர்த்தம் இந்த இரண்டு விடயங்களைத் தவிர வேறு விடயங்கள் எதுவும் இருக்காது என்பது அல்ல. இருக்கின்ற வேறு பல விடயங்கள் இந்த இரண்டில் ஒன்றைச் சார்ந்து அல்லது இணைந்தே இருக்கும் என்பதுதான் இதன் அர்த்தம்.

இலங்கை அரசியலை எடுத்துக் கொண்டால் சில உதாரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக தென்னிலங்கை அரசிலை எடுத்துக்கொண்டு பார்க்கலாம்.

இலங்கையில் தொடங்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சி 1935இல் ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியாகும். இந்தக் கட்சி ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, மக்கள் நலன்பேண் இடதுசாரிக் கட்சியாகும். அன்றைய நிலையில் சமசமாஜக் கட்சிக்கு எதிரான பிரதான எதிர் அணியாக இலங்கையை ஆட்சி புரிந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் இருந்தது. ஆக இரண்டு அணிகளே அரசியலில் இருந்தன. மூன்றாவது அணி என்று எதுவும் இருக்கவில்லை.

1948 பெப்ருவரி 4இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிவிட்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் வெளியேறிய போது, அதன் இடத்தை ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளித்துவ பிற்போக்குக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துக் கொண்டது. அதன் பின்னர் இடதுசாரி கட்சிகளான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையிலேயே பிரதான முரண்பாடு இருந்தது.

சங்கரன்

ஆனால் இலங்கை இடதுசாரிகள் இலங்கையின் பருண்மையான நிலைமைகளைச் சரிவரப் புரிந்துகொண்டு வேலைசெய்யத் தவறியதால், அவர்களது இடத்தை ஐ.தே.கட்சியிலிருந்து எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் வெளியேறிய தேசிய முதலாளித்துவ சக்திகள் அமைத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துக் கொண்டது. அதன் பின்னர் பிரதான முரண்பாடு ஐ.தே.கவுக்கும் சிறீ.ல.சு.கவுக்கும் இடையில் மாறியது.

மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்ட இடதுசாரிகள் காலத்துக்காலம் 'இடதுசாரி முன்னணி', 'சோசலிச முன்னணி' என்ற பெயர்களில் மூன்றாவது அணியை அமைக்க முயன்றனராயினும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. (1977 பொதுத் தேர்தலின் போது இடதுசாரிகள் மூன்றாவது அணியாகப் போட்டியிட்டு வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்ற ஆசனம் எதையும் பெறத் தவறியதுடன், ஐ.தே.கவின் அமோக வெற்றிக்கும் வழிவகுத்தனர்) அதன் காரணமாக அவை அரசியலில்

இருப்பதென்றால் ஏகாதிபத்திய – எதிர்ப்பு சிறீ.ல.சு.கவுடன் கூட்டுச்சேர வேண்டும் என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அக்கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டனர். அதன் காரணமாகத்தான் அவை இன்றுவரை அரசியலில் நின்றுபிடிக்க முடிகிறது. (இதன் அர்த்தம் இடதுசாரிக் கட்சிகள் சுயமாகச் செயல்பட்டு ஐ.தே.கவுக்கு எதிரான பிரதான அணியாக வரக்கூடாது என்பதல்ல)

இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் பலமிழந்த பின்னர், இடதுசாரிக் கோசங்களுடன் உருவான ஜே.வி.பி. தான்தான் இலங்கையின் உண்மையான இடதுசாரி இயக்கம் என்று சொல்லிக்கொண்டும், மூன்றாவது அணியாகத் தன்னைப் பாவனைப்படுத்திக் கொண்டும் மக்கள் முன் வந்தது. ஆனால் அவர்கள் பிரதான எதிரியான ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடியான ஐ.தே.கவையும் இனங்காணத் தவறி, 1971இல் சிறீமாவோ தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கி பெருத்த அழிவுகளுடன் தோல்வி கண்டனர். அதன்மூலம் அவர்கள் அடிப்படையில் தவறிழைத்து, பின்னர் ஒன்றன்பின் ஒன்றான தோல்விகளைச் சந்தித்தனர்.

பின்னர் அவர்கள் ஒரு கட்டத்தில் சந்திரிக தலைமையில் இருந்த சிறீ.ல.சு.கவுடனும், இப்பொழுது ரணில் தலைமையிலான ஐ.தே.கவுடனும், உத்தியோகபூர்வமாகவும் உத்தியோகபூர்வமற்றும் கூட்டுச் சேரந்து

செயற்பட்டு வருகின்றனர். அதன் காரணமாக மூன்றாவது அணி என்ற ஜே.வி.பியின் நடைமுறைச் சாத்தியமற்ற நிலை தோல்வி கண்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பன நடைபெற்ற பின்னர், ஐ.தே.கவும் சிறீ.ல.சு.கவில் மைத்திரி தலைமையில் இருந்த வலதுசாரிப் பிரிவும் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்த பின்னர், மகிந்த ராஜபக்சவை உத்தியோகபூர்வமற்ற தலைவராகக் கொண்டு சிறீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி புதிதாகத் தோற்றம் பெற்றது. அக்கட்சியை மூன்றாவது அணி என அரசியல் நோக்கர்கள் வர்ணித்தும் வந்தனர். ஆனால் சிறீ.ல.சுகவின் அடிப்படைக் கொள்கைகளை அக்கட்சி சுவீகரித்துக் கொண்டதன் மூலம், அக்கட்சியே ஐ.தே.கவுக்கு எதிரான பிரதான கட்சியாக முன்னுக்கு வந்துள்ளது. அதன் காரணமாக மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சி மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டது. இதை கடந்த பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது தெளிவாகக் காண முடிந்தது. ஆனால் மைத்திரி அணி நீண்ட காலத்துக்கு மூன்றாவது அணியாகத் தொடர யதார்த்த சூழல் இடம் கொடுக்காது. அவ்வணியின் ஒருபகுதி ஐ.தே.கவுடனும், மறுபகுதி சிறீலங்கா பொதுஜன பெரமுனவுடனும் அணிசேரும் நிலையே காணப்படுகின்றது.

இதிலிருந்து தென்னிலங்கை அரசியலில் மூன்றாவது அணி சாத்தியமில்லை என்பதை வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்துள்ளதைத் தெரிந்து கொள்ள முடியும். இது ஒருபுறமிருக்க தமிழ் அரசியல் சூழலில் இந்த 'மூன்றாவது அணி' என்ற கருதுகோள் எப்படிச் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் உருவான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியே தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியாகும். அக்கட்சி உருவான போது அக்கட்சியே தமிழ் தேசிய முதலாளிகளின் கட்சி என்று கருதிக்கொண்டு அக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தை கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு பிரிவினர் (தோழர் அ.வைத்திலிங்கம் போன்றோர்) முன்வைத்தனர். ஆனால் தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழர்கள் மத்தியிலுள்ள சாதிவெறி பிடித்த, நிலப்பிரபுத்துவ சக்திகளின் பிரதிநிதி என்ற கருத்தை கட்சியிலுள்ள பெரும்பான்மையானோர் (தோழர் மு.கார்த்திகேசன் போன்றோர்) வலியுறுத்தியதால் நிகழவிருந்த தவறு தவிர்க்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சி பற்றி கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவு சரியென்பதை தமிழரசுக் கட்சியின் தோற்றம் நிரூபித்தது. காங்கிரசிலிருந்து கு.வன்னியசிங்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரிந்து வந்து தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி, ஓரளவு குழந்தைப் பருவத்திலிருந்த தமிழ் தேசிய முதலாளித்துவ சக்திகளினதும், குறிப்பாக அரச ஊழியர்களான தமிழ் மத்தியதர வர்க்கத்தினதும் பிரதிநிதியாகத் தன்னை ஆரம்பத்தில் இனம் காட்டியது. அதனால் கம்யூனிஸ்ட் கட்சி தமிழரசுக் கட்சியை நட்புச் சக்தியாகக் கருதி, ஆரம்ப காலத்தில் அக்கட்சி மீது காங்கிரஸ் கட்சியினர் தொடுத்த தாக்குதல்களிலிருந்து அக்கட்சிக்கு பாதுகாப்பும் வழங்கியது. அதேநேரத்தில் தமிழ் அரசியலில் பிற்போக்கு தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிரதான அணியாக இருந்த வடபகுதி இடதுசாரிகள் தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆனால் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் சென்ற அதே பாதையில் சென்றதால் அவர்களுக்கெதிரான அணிக்கான வெற்றிடம் மீண்டும் காலியானது. 1975இல் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும், வி.நவரத்தினத்தின் தமிழர் சுயாட்சிக் கழகமும், சி.சுந்தரலிங்கத்தின் அடங்காத் தமிழர் முன்னணியும் இணைந்து 'தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி' (TULF) என்ற அமைப்பை உருவாக்கிய பின்னர் தமிழர் அரசியலில் ஒரு தெளிவான இடைவெளி ஏற்பட்டு இவர்களுக்கு எதிரான பிரதான அணியொன்றின் தேவை முன்னரிலும் கூடுதலாக உணரப்பட்டது. அதாவது இவர்களுக்கு எதிரான பிரதான அணியாக இடதுசாரிகள் உருவெடுக்கும் சூழல் மீண்டும் உருவானது.

ஆனால் சில புறச் சூழ்நிலைகள் இடதுசாரிகள் தமிழர் அரசியலில் மீண்டும் சக்தி பெறுவதற்கு இடையூறாக அமைந்துவிட்டன. அதில் ஒன்று இடதுசாரிக் கட்சிகளும் அங்கம் வகித்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள். இரண்டாவது, இடதுசாரிப் போர்வையில் இருந்த ஜே.வி.பி. 1971இல் செய்த எதிர்ப் – புரட்சி ஆயுதக் கிளர்ச்சி. மூன்றாவது வடக்கில் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் மூலம் புரட்சிகரமாகவும் சக்தியாகவும் வளர்ந்து வந்த புரட்சிகர (சீனசார்பு) கம்யூனிஸ்ட் கட்சியில் 1972இல் ஏற்பட்ட பிளவு.

இருந்தும் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவான மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழர் பிரச்சினையில் ஒரு சரியான அணுகுமுறையை எடுத்து தேசிய இனப் பிரச்சினையில் இடதுசாரிகளின் வகிபாகத்தை மீண்டும் முன்னணிக்கு கொண்டுவர முயன்றது. அதற்காக 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற பரந்துபட்ட அமைப்பையும் உருவாக்கியது. இந்தக் கட்டத்தில்தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 'தனித் தமிழீழம்' என்ற கருத்தை முன் வைத்தது.

தமிழ் ஈழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட பின்னர் தமிழர் அரசியலில் முன்னொருபோதும் இல்லாத வகையில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணி ஏகப் பிரதிநிதியாக முன்வந்து, இடதுசாரிகளோ அல்லது மாற்றுக் கருத்துள்ள வேறு சக்திகளோ செயல்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற அரசியல் தோல்வி கண்டு ஆயுதப் போராட்ட அரசியல் முன்னணிக்கு வந்தது.

ஆயுதப் போராட்ட அரசியலிலும் தமிழ் பிற்போக்கு சக்திகளின் மொத்தப் பிரதிநிதியாகவும், பாசிச இயக்கமாகவும் உருவெடுத்த புலிகளுக்கு எதிராக இடதுசாரித் தன்மை கொண்ட பல இயக்கங்கள் உருவான போதும் அவற்றின் மத்தியில் ஒற்றுமையின்மையாலும், அவற்றின் அராஜகப் போக்குகளினாலும், பின்னர் அவற்றை புலிகள் ஆயுத ரீதியில் ஒழித்துக் கட்டியதாலும் அவை அரசியல் அரங்கிலிருந்து முற்றாகத் துடைத்தெறியப்பட்டன.

2009இல் போர் முடிவுற்ற பின்னர் தமிழர் அரசியல் கள நிலவரம் மாறியது. புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதான அரசியல் சக்தியாக தொடர்ந்தும் நீடித்தது. இந்த கூட்டமைப்பில் முன்னர் புலிகளால் அழிக்கப்பட்ட பல மாற்று இயக்கங்கள் புலிகளின் காலத்திலேயே உள்வாங்கப்பட்டிருந்தன. ஒரேயொரு விதிவிலக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மட்டும் கூட்டமைப்புக்கு எதிரணியில் இருந்தது (தொடர்ந்தும் இருக்கின்றது). அதன் காரணமாக பாரம்பரியமாக தமிழ் பிற்போக்குத் தலைமைக்கு எதிராக இருந்து வந்த இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள், மாற்றுக்

கருத்துள்ளோரின் தெரிவாக ஈ.பி.டி.பி. கட்சியே இருக்கின்றது.

இன்றைய தமிழ் அரசியல் சூழலை எடுத்து நோக்கினால் ஒரு பக்கம் தமிழ் பிற்போக்கு சக்திகளின் பிரதிநிதியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பும், மறுபுறம் உண்மையான தமிழ் தேசியவாதிகள், இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள், மாற்றுக் கருத்தாளர்கள் ஆகியோரின் பிரதிநிதியாக ஈ.பி.டி.பியும் இருக்கின்றன. யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் தமிழ் அரசியலின் இன்றைய கள நிலவரம். பல்வேறு அரசியல் சக்திகள் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இதில் ஏதாவது ஒரு அணியுடன் இணைந்து கொள்வதன் மூலமே தமது எதிர்கால அரசியலை முன்னெடுக்க முடியும் என்ற நிலையே காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், இந்த இரண்டு அணிகளுக்கும் எதிராக அல்லது மாற்றாக மூன்றாவது அணியொன்றை உருவாக்குவது என்ற கருத்து யதார்த்தபூர்வமானது அல்ல. ஏற்கெனவே இந்த மூன்றாவது அணி முயற்சியில் இறங்கியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தோல்வி கண்டுள்ளது. அதேபோல தற்பொழுது இன்னொரு மூன்றாவது அணியை உருவாக்க முயலும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் முயற்சியும் தோல்வியடையும்.



எனவே, இலங்கையின் சிங்களவர் அரசியலில் மட்டுமின்றி, இலங்கையின் தமிழர் அரசியலிலும் 'மூன்றாவது' அணி என்பது நடைமுறைச் சாத்தியமற்ற பகல் கனவு மட்டுமே.

**இந்திய அனுபவம்**

இந்த மூன்றாவது அணி விடயத்தில் இந்திய இடதுசாரிகளின் அனுபவமும் ஏறத்தாழ இலங்கையின் அனுபவம் போன்றதே.

இந்தியப் பெரு முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு, இந்திய காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும், பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராகவும், இந்திய இடதுசாரிகள், குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்று மூன்றாவது அணியை உருவாக்கிப் பார்த்தார்கள். அதனால் எவ்விதமான பயனும் கிடைக்கவில்லை. கடந்த பொதுத் தேர்தலின் போது இவர்களது மூன்றாவது அணியின் உருவாக்கம் வலதுசாரி இந்துத்துவ பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் பதவிக்கு வருவதில் போய் முடிந்தது.

அதேபோல, தமிழ்நாட்டில் சில தடவைகள் இடதுசாரிக் கட்சிகள் வேறு சில கட்சிகளுடன் சேர்ந்து மூன்றாவது அணியை உருவாக்கினார்கள். அப்படி கடந்த சட்டசபைத் தேர்தலின் போது உருவாக்கிய 'மக்கள் நலக் கூட்டணி' என்ற மூன்றாவது அணி, அதிமுக மீண்டும் ஆட்சியைப் பிடிக்க உதவியதில் முடிந்தது.

இந்த அனுபவங்களில் இருந்து பாடம் படித்த மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பிரகாஸ் கரத், 'மூன்றாவது அணி என்பது நடைமுறைக்கு ஏற்றது அல்ல' என்ற சாரப்பட சில மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

எனவே, இலங்கைத் தமிழர் அரசியலிலும் மூன்றாவது அணி என்பது, தற்போது செல்வாக்கு இழந்து வரும் பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைக்கு வாய்ப்பாகவே அமையும். இந்த உண்மையை தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, வலதுசாரிகளின் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஓரணியாகச் செயல்படுவதே பயனுள்ளதாக அமையும்.

# முகநூல் பக்கத்தில் இப்படிக் கருத்துச் சொல்வோரும் உண்டு!

மனித அறிவைப்போன்றே மனிதர்களால் எழுதப்படும் சட்டங்களும் குறைபாடு கொண்டவையே!

ஒரு நாட்டை, ஒரு இனத்தை பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளை காலம் கற்றுத்தந்துகொண்டேயிருக்கும்.

அது சில வேளைகளில் எழுத்துருவில் பதிந்த சட்டங்களை மீறச் செய்யும்.

உலகில் நிகழ்ந்த மாற்றங்களில் அதிகமானவை அந்தந்த காலங்களில் நடைமுறையில் இருந்த சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மீறியே நடந்தேறியுள்ளன.

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களின் போதும் சட்டங்கள் பகிரங்கமாகவே மீறப்பட்டன. சட்டங்கள் மீறப்பட்டதை எதிர்த்து ஒரு சாரார் பல வகையான முறையில் போராடினர்.

அவர்களில் பெரும்பாலானோரின் அசைவுகளுக்கு பின்னால் சுய காரணங்களே நிரம்பியிருந்தன. என்றாலும் அவர்கள் தம்மை சட்டம், ஜனநாயகங்களின் பாதுகாவலர்களாக பறைசாற்றிக் கொண்டனர். இன்னும் சிலர் அறியாமையில் உளறிக்கொண்டிருந்தனர்

மறு சாரார் சட்டத்தை மீறியாவது நல்லது நடந்தேறட்டும் என்று தம்மையும் சட்டத்தை புறக்கணிப்போராக அம்பலப்படுத்திக் கொண்டனர்.

சட்டங்கள் அத்தனையும் நீதியானவை என்பது பாமரத்தனமான கற்பனையாகும்.

தத்தமது தனிப்பட்ட, அரசியல் இலாபங்களுக்காக உருவாக்கப்படும் சட்டங்கள் சவாலுக்கு உட்படக் கூடியவையே.

நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் இணைந்து போவதும் முரண்படுவதும் காரணங்களால் நிகழ்பவை.

நாட்டின் இறைமைக்கு ஆபத்து ஏற்படலாம் என ஜனாதிபதி கருதும் போது சட்டத்தின் துணையுடனோ அல்லது அதை மீறியோ செயல்படும் தார்மீக உரிமை நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு உண்டு என்பது எமது நிலைப்பாடாகும்.

குறைபாடுகள் நிறைந்த சட்டங்களை அடிப்படையாக கொண்ட வாதாட்டங்களின் துணையுடன் எழுதப்படும் தீர்ப்புகளை அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

தேவை ஏற்படின் நாட்டை பாதுகாக்க சர்வதேச கூலிப்படைகளின் தலைவரான ரணிலையும் அவரது கூட்டத்தையும் சிறையிலடைப்பதற்கும் ஜனாதிபதி தயங்கக்கூடாது!

**– கிழக்கு தேசம் EastLand –**

**(Waffa Farook என்பவரின் முகநூல் பக்கத்தில் இந்தக் கருத்து 19.12.2018 இல் வெளிவந்தது)**


# கூட்டமைப்பு ரணிலை ஆதரித்ததிற்கு இவையும் காரணங்கள்

ஜனாதிபதி மைததிரிபால சிறிசேன ரணிலை பிதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்ததிற்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பம் முதல் வன்மத்துடன் செயற்பட்டதற்கு அதன் வழமையான ஐ.தே.க. ஆதரவு நிலைப்பாடு காரணம் மட்டுமின்றி சில உடனடிக் காரணிகளும் இருந்தன.

மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கம் சிறையிலுள்ள புலிப் பயங்கரவாத சந்தேக நபர்களை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வது குறித்து பதவி ஏற்றவுடனேயே தீவிரமாக ஆராய்ந்து வந்தது. அப்படி அவர்கள் விடுதலை செய்யப்பட்டால், அது கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் பாரிய செல்வாக்கு சரிவை ஏற்படுத்தியிருக்கும். ஏனெனில் நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போலி எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தை கடந்த மூன்றரை வருடங்களாக ஆதரித்து வந்தபோதிலும் இந்த தமிழ் கைதிகளின் விடுதலை உட்பட தமிழ் மக்களின் எந்தவொரு உடனடிப் பிரச்சினைக்கும் கூட தீர்வு கண்டிருக்கவில்லை.

கூட்டமைப்பு ரணிலை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததிற்கு வேறொரு காரணமும் உண்டு. பிரதான தமிழ் தலைமைகள் சுமார் 70 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக தமிழ் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்து வந்தபோதிலும், இனப் பிரச்சினைக்கான தீர்வு மட்டுமின்றி, தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்கு கூட தீர்வு கண்டது கிடையாது.

இந்த நிலைமையில் காலத்துக்காலம் ஆட்சியில் இருந்த அரசுகளுடன் ஒத்துழைத்த அல்பிரட் துரையப்பா, அருளம்பலம், தியாகராசா, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களே தமிழ் மக்களுக்காக சில சேவைகளைத் தன்னும் செய்தார்கள். ஆனால் தமிழ் தலைமைகள் இவர்களைத் ''துரோகிகள்'' என முத்திரை குத்தி, அல்பிரட் துரையப்பா, தியாகராசா போன்றோரை புலிகள் மூலம் படுகொலை செய்வித்தனர். அருளம்பலத்தையும் கொல்ல முயன்றனர். டக்ளஸ்



தேவானந்தாவை ஒரு தடைவ அல்ல, பல தடவைகள் கொலை செய்வதற்கு முயன்றனர்.

அதற்குக் காரணம் அரசுகளுடன் ஒத்துழைத்துச் செயற்பட்டவர்களில் ஆகக் கூடுதலான சேவைகளை வடக்கு மக்களுக்குச் செய்தவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே. அதுமட்டுமின்றி, மற்றவர்கள் போலல்லாமல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற ஒரு அரசியல் கட்சியை உருவாக்கி, பிரதான தமிழ் தலைமைக்கு எதிரான ஒரு மாற்றுத் தலைமையாக அதை வளர்த்து, அதற்கென தனியான ஒரு வாக்கு வங்கியையும் கட்டியெழுப்பியுள்ளார்.

**புனிதன்**

ஈ.பி.டி.பியின் தொடர்ச்சியான மக்கள் சேவை காரணமாக கடந்த பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அது கணிசமான வாக்குகளைப் பெற்றதுடன், சில சபைகளின் ஆட்சியதிகாரத்தையும் கைப்பற்றியது. இந்த உண்மையை தமிழ் கூட்டமைப்பாலும் நிராகரிக்க முடியவில்லை. உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் குறித்து வடமராட்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ''தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் எங்களை விட, அபிவிருத்தி பற்றிக் கதைத்த சில கட்சிகளின் வாக்குகள் அதிகரித்துள்ளன'' என வயிற்றெரிச்சலுடன் குறிப்பிட்டார்.

அண்மையில் மகிந்த ராஜபக்ச பிரதமராகப் பதவியேற்ற பொழுது, டக்ளஸ் தேவானந்தாவும் மீள் குடியேற்ற, புனர்வாழ்வு மற்றும் இந்து சமய விவகார அமைச்சராகப் பதவியேற்றார். மகிந்தவின் அரசு உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் சதி சூழ்ச்சிகளால் அற்ப ஆயுளில் மரணித்துப் போனாலும், அந்தக் குறுகிய காலத்துக்குள் - 52 நாட்களில் - டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு தன்னால் செய்யக்கூடிய சேவைகளைச் செய்ய ஆரம்பித்திருந்தார். அதில் முக்கியமானது வடக்கு கிழக்கு மக்களுக்கான வீட்டுத் திட்டமாகும்.

டக்ளஸ் தேவான்தாவின் இந்த வேகமான செயற்பாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பை கிலி கொள்ள வைத்தது என்பது இரகசியமானதல்ல. எனவே தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப்பிழையாக வர வேண்டும் என்ற மனப்பான்மையில், தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை டக்ளசின் அமைச்சுப் பதவியை இல்லாமல் செய்ய வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கங்கணம் கட்டிச் செயற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

நமது நாட்டின் ஒருமைப்பாடு, நமது மக்களின் ஐக்கியம், நமது பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம் – இவை நமது இலட்சியத்தின் நிச்சய வெற்றிக்கான அடிப்படை உத்தரவாதங்கள் ஆகும்.

–மா சே துங்

# இலங்கையின் அரசியல் குழப்ப நிலை குறித்து இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

## உதய கம்மன்பில

இலங்கையின் அரசியல் நெருக்கடியில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பு மற்றும் பிரித்தானியாவின் எம் — 16 புலனாய்வு அமைப்புகளின் தலைமீடுகள் இருந்ததாக பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றம்சாட்டியுள்ளார்.

**பிரித்தானியாவின் த கார்டியன் இதழில் வெளியான செய்தி ஒன்றுக்கு பதிவிட்டுள்ள கருத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.**

"சி.ஐ.ஏ. மற்றும் எம் — 16 போன்ற வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டோம். இது ஒரு கடுமையான சமர் என்பது எங்களுக்குத் தெரியும்.

நாடாளுமன்றத்தில் எங்களுக்கு பெரும்பான்மை இல்லை என்று சபாநாயகர் அறிவித்தபோது, அங்கிருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆரவாரம் செய்தனர். அவர்கள் அனைவரும் இப்போது நன்றாக உறங்க முடியும்" என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## டியு குணசேகர

தற்போது இலங்கையில் இருக்கின்ற ஊழல்தனமான தேர்தல் முறையையும், ஊழல்கார நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு இலங்கையில் ஒரு ஸ்திரமான நாடாளுமன்றத்தை உருவாக்க முடியாது என குறிப்பிட்டிருக்கிறார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டியு குணசேகர.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'த ஐலன்ட்' பத்திரிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கும் குணசேகர மேலும் கூறுகையில்,

2015இல் 'நல்லாட்சி' அரசாங்கம் பதவியேற்றதும் அறிவித்த 100 நாள் வேலைத்திட்டத்தில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதாக அறிவித்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை.

அதுமட்டுமின்றி, 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் கட்சி மாறுவதைத் தடை செய்யும் சட்டச் சரத்தை அதில் சேர்க்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும் உயர்மட்டத் தலைமைகளே கட்சி தாவல் தடைச் சட்டத்தைச் சேர்க்காமல் விட்டதற்கான காரணகர்த்தாக்கள். எனவே இன்றைய அரசியல் குழப்ப நிலைக்கு இரண்டு பிரதான கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்து வந்த நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கைகளை முறியடிப்பதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தார். இரு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்த ராஜபக்ச அந்தப் பதவியை ஏற்றிருக்கக்கூடாது. பதிலாக சமல் ராஜபக்சவை பிரதமர் பதவிக்கு நியமித்திருந்தால் நிலைமைகள் வேறுவிதமாகப் போயிருக்கக்கூடும்.

நாட்டின் பொருளதார நிலைமைகள் மோசமடைந்து செல்வது பற்றி அரசியல் கட்சிகள் மிகுந்த அக்கறை செலுத்துவது அவசியம். புள்ளி விபரங்கள் தெரிவிப்பதன்படி, நாட்டின் சனத்தொகையில் 20 சதவீதமானோர் தேசிய வருவாயில் 54 வீதத்தை அனுபவிக்கின்றனர். அதே நேரத்தில் இன்னுமொரு 20 வீதமானோர் வெறுமனே 4 வீதத்தையே அனுபவிக்கின்றனர். இது ஒரு பாரதூரமான நிலைமையாகும்.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையின்படி, நாட்டில் ஸ்திரமான அரசியல் சூழ்நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த பொதுத் தேர்தலிலும் எந்தவொரு தனிக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கான சாத்தியமில்லை எனத் தெரிவித்துள்ளார் டியு குணசேகர.

## வாசுதேவ நாணக்கார

ஜனாதிபதியின் வாள் அரசாங்கத்தை நோக்கியே இருக்கப்போகின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நினைத்த பிரகாரம் ஆட்சி செய்ய முடியாது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவநாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து மேலும் கூறுகையில்,

அதனால் ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் ஆட்சியை வழங்கினாலும் கடந்த காலங்கள் போல் அவர்களுக்கு செயற்பட முடியாது. அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி எதிராக இருக்கும் பொழுது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாங்களும் கடும் போராட்டங்களை மேற்கொள்வோம்.

அத்துடன் அரசியல் ரீதியில் ஜனாதிபதி நிர்க்கதியான நிலைக்கு ஆளாகக்கூடாது என்பதற்காகவே மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்தாலும் ஜனாதிபதியின் வாள் அரசாங்கத்தை நோக்கியே இருக்கப்போகின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சி நினைத்த பிரகாரம் செயற்பட ஜனாதிபதி இடமளிக்கமாட்டார் என்றார்.

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண

சதித்திட்டங்கள் காரணமாக ஜனாதிபதி மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க தள்ளப்பட்டார் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் லிபரல்வாத கொள்கையை தடுத்து நிறுத்தவே மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதி பிரதமராக நியமித்தார். நாட்டைப் பாதுகாக்க தொடர்ந்தும் நாங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் எதிராக மக்கள் எங்களுடன் அணிதிரள வேண்டும்.

ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சி நினைத்த பிரகாரம் ஆட்சியை கொண்டு செல்ல இடமளிக்கமாட்டார்.

அதனால் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம். ஜனாதிபதியின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க நாங்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியுடனேயே இருப்போம் என அவர் குறிப்பிட்டார்.

# சுமந்திரன் – சம்பந்தன் அடாவடித்தனம் இப்படியும் முடியலாம்!




இன்றைய இலங்கையின் நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய அணியாக 98 உறுப்பினர்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு திகழ்கின்றது. மூன்றாவது பெரிய அணியாக 16 உறுப்பினர்களுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. அதிலும் இரண்டு உறுப்பினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு ஒதுங்கிவிட்டதால் உண்மையான கூட்டமைப்பின் எண்ணிக்கை 14 மட்டுமே.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து 'தேசிய அரசாங்கம்' என்ற போர்வையில் இருந்ததால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 54 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தனியாக 'கூட்டு எதிரணி' என்ற பெயரில் செயல்பட்ட போதும், அவர்களுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்காது தமிழ் தேசியக் கூட்டமைப்பையே உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக அங்கீகரித்து, அவர்களுக்கு உரிய வரப்பிரசாதங்களைக் கொடுத்து வைத்திருந்தது ரணிலின் அரசாங்கம்.

ஆனால் போலி எதிர்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி ஒன்றுக்குரிய வரப்பிரசாதங்களையும் சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டு, ரணில் அரசாங்கத்தின் துணைக்குழுவாகவே செயல்பட்டு வந்தது. அதுமாத்திரமின்றி, அண்மையில் நாட்டில் அரசியல் குழப்ப நிலை தோன்றிய பொழுது கூட்டமைப்பு முற்றுமுழுதாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டதுடன், ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டும் என கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களும் எழுத்து மூலமான ஆதரவையும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலைமையில் நாட்டின் அரசியல் அரங்கில் இரண்டு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

ஒன்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐ.தே.கவுடனான கூட்டு அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துவிட்டதால், அதுவே யதார்த்தத்தில் உண்மையான எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

இரண்டாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எண்ணிக்கை வெறுமனே 14 என்பதாலும், அது வெளிப்பிடையாக ரணில் அரசாங்கத்தின் பங்காளி போல செயல்பட்டு வருவதாலும், எதிர்க்கட்சி அந்தஸ்தை இழந்துள்ளது.

இந்த நிலைமையை தவிர்க்க முடியாமல் ஏற்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தார்.

இந்த நியமனத்தைப் பொறுக்க முடியாத தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஐ.தே.கவின் சில உறுப்பினர்களும் சம்பந்தனையே தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்க வேண்டும் என போலியான நியாயங்களை முன் வைக்கின்றனர். குறிப்பாக, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், கூட்டமைப்பை இன்று வழிநடத்தும் ஐ.தே.க. புறோக்கர் சுமந்திரனும் பதவி ஆசை காரணமாகவும், ஐ.தே.க. விசுவாசம் காரணமாகவும் ஏதேதோ எல்லாம் பிதற்றுகின்றனர்.

**திரிலோகமூர்த்தி**

அவர்களது வாதம் என்னவெனில், அரசாங்கத்தின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருப்பதால், அவரும் அரசாங்கத்தின் அங்கம் என்றபடியால் அவர் தலைமைதாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சிப் பதவி வழங்கக்கூடாது என்பதாகும். இந்த வாதம் நியாயத்தினதும் சட்டத்தினதும் அடிப்படையிலான வாதமல்ல. இது குதர்க்க வாதம்.

அவர்களது குதர்க்க வாதத்தின்படி பார்த்தாலும். ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்டு ஜனாதிபதியாகத் தெரிவானவர் அல்ல. அவர் பொது வேட்பாளராக பொதுச் சின்னத்தில் போட்டியிட்டே வெற்றி பெற்றவர். அத்துடன் அவர் நாடாளுமன்ற உறுப்பினரும் அல்ல. நாட்டின் அரசியல் சாசனப்படி நாட்டு மக்களின் தலைவர் என்ற வகையில் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் தலைமைதாங்க வேண்டியது ஒரு ஜனாதிபதியின் கடமையாகும். அதற்காக அவரை ஆளும் கட்சியின் உறுப்பினர் என்று வரையறுக்க முடியாது. அதுமட்டுமில்லாமல் ஜனாதிபதி மைத்திரி இன்றைய ஐ.தே.க. அரசாங்கத்துக்கு எதிரான தனது கடுமையான நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தியும் வருகின்றார்.

நிலைமை இப்படி இருக்க, சம்பந்தனும் சுமந்திரனும் மகிந்த ராஜபக்ச நாட்டின் பிரதமராக இருக்கவும் முடியாது, எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்க முடியாது என்று அடம் பிடிக்கின்றனர். அதாவது அரசாங்கமும் தங்களிடம் இருக்க வேண்டும், எதிர்க்கட்சி பதவியும் தங்களிடம் இருக்க வேண்டும் எனவும் விதண்டாவாதம் செய்கின்றனர். இவர்கள் இருவரினதும் அடாவடித்தனத்தைப் பார்த்து இவர்களை ஆதரித்த தமிழ் மக்களே "எண்டாலும் இவர்களுக்கு இவ்வளவு பேராசையும் அடாவடித்தனமும் தேவையில்லை" என புலம்புகிறார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரும் புதிருமாகப் போட்டியிட்டவர்களில் மைத்திரி சுமார் 62 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார். மகிந்த தோல்வியடைந்தாலும் சுமார் 59 இலட்சம் வாக்குகள் பெற்றார். அவர் பெற்ற வாக்குகள் அவ்வளவும் சுத்தமான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு வாக்குகள். மைத்திரிக்கு வாக்களித்தவர்களில் பெரும் பகுதி ஐ.தே.க, தமிழ் தேசியச் கூட்டமைப்பு மற்றும் முஸ்லீம் கட்சிகளின் வாக்குகள் என்றாலும், அதில் இருபது இலட்சம்

என்றாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் எனக் கொள்ளலாம். இன்று மைத்திரியும் மகிந்தவும் திரும்பவும் ஒற்றுமைப்பட்டு ஓரணியில் இருப்பதால், கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு கணிப்பீட்டின்படி அவர்கள் இருவரினதும் மொத்த வாக்கு வங்கியின் பலம் சுமார் 80 இலட்சமாகும்.

இந்த நிலைமையில் நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களில் வெறுமனே 3 (மூன்று) வீதத்தை (கடந்த பெப்ருவரியில் நடந்த உள்ளூராட்சி தேர்தல் வாக்களிப்பின்படி அதுவும் குறைவடைந்துவிட்டது) மட்டும் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான நீதி நியாயமும் இன்றி 80 இலட்சம் வாக்காளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களை விடுத்து தனக்குத்தான் எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என அடம் பிடிப்பதைத்தான் கலிகால கொடுமை என்று சொல்வார்களோ?

இவர்களது செய்கையைப் பார்க்க ஒரு விடயம்தான் நினைவுக்கு வருகிறது. 1965 பொதுத் தேர்தலின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனது தலைமையில் அரசமைக்க தமக்கு ஆதவளிக்கும்படி விடுத்த அழைப்பை நிராகரித்த 'தந்தை' செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியும், 'விண்ணன்' ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சியும் வீம்புத்தனமாக முடிவெடுத்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவளித்தன. அவர்களது இந்த ஒருதலைப்பட்சமான முடிவு சிங்கள – தமிழ் மக்களது சிந்தனையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவு என்ன?

அடுத்த வந்த 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ் கட்சிகளின் தயவு இல்லாமல் ஒரு ஆட்சியை அமைக்கக்கூடிய நிலையை, அதாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கக்கூடிய ஒரு நிலையை, நாட்டு மக்கள் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசுக்கு வழங்கினர்.

அதுமட்டுமல்ல, தமிழ் கட்சிகள் இரண்டும் எடுத்த முடிவை தமிழ் மக்களும் அங்கீகரிக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டின. தமிழ் கட்சிகள் இரண்டினதும் ஜம்பவான்களான 'தளபதி' அ.அமிர்தலிங்கம், 'விண்ணன்' ஜீ.ஜீ.பொன்னம்பலம், 'இரும்பு மனிதன்' ஈ.எம்.வி.நாகநாதன், 'உடுப்பிட்டி சிங்கம்' மு.சிவசிதம்பரம், 'அடலேறு' மு.ஆலாலசுந்தரம் ஆகியோரை அத்தேர்தலில் தமிழ் மக்கள் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பினர்.

அது போன்ற ஒரு நிலையைத்தான் இப்பொழுதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தனும் சுமந்திரனும் உருவாக்குகின்றனர். மைத்திரி – மகிந்த அணியினர் அரசாங்கத்தையும் அமைக்க முடியாது, எதிர்க்கட்சியாகவும் செயல்பட முடியாது இவர்கள் ஆடும் தாண்டவக் கூத்தினால், அடுத்த பொதுத் தேர்தலில் 1970 தேர்தல் போன்று நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மைத்திரி – மகிந்த அணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்குவதுடன், மறுபக்கத்தில் தமிழ் மக்கள் தமது கடமையாக கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களை வீட்டுக்கு அனுப்பும் வேலையைச் செய்தாலும் ஆச்சரியமில்லை.

ஏனெனில், சில வேளைகளில் வரலாறு தேவை கருதி மீண்டும் மீண்டும் நிகழ்ந்து வந்திருப்பதை நாம் காண முடியும்.

---

**முன்பக்கத் தொடர்ச்சி…**

சிறிசேனவுமாகும். அது எப்படி நடந்தது?

'தேசிய அரசாங்க'த்தின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நீண்டகால நோக்கில் தனது அதிகாரத்தை நிறுவி அந்நிய எஜமானர்களுக்குச் சேவை செய்யும் வகையில் பல நேரடி மற்றும் மறைமுகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படத் தொடங்கியது. அது பின்வரும் செயல்பாடுகளில் இறங்கியது.

இலங்கை தனது அரசியல், பொருளாதார சுயாதிபத்தியத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்கும் கொள்கைகளைப் புறந்தள்ளிய ஐ.தே.க., 1977இல் தற்போதைய அக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரும், கடைந்தெடுத்த ஏகாதிபத்திய விசுவாசியுமான ஜே.ஆர்ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கைகளை நவ தாராளவாத வடிவத்தில் மேற்கொள்ளும் முயற்சிகளை ரணில் தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்தது. அதை அவர் ஒருமுறை வெளிப்படையாகவும் குறிப்பிட்டார். இந்தப் போக்கு நீண்ட காலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் ஊறித் திளைத்த ஜனாதிபதி மைத்திரிக்கும் அவரது அணியினருக்கும் ஒவ்வாத ஒன்றாகும். இந்தப் பிரச்சினையே தேசிய அரசாங்கத்தில் முரண்பாடு முளை விடுவதற்கு அத்திபாரமாக அமைந்தது.

அடுத்ததாக, பிரதமர் ரணில் தனது அதிகார வரம்புக்கு அப்பால் சென்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைத் தனது கையில் எடுத்து தன்னிச்சையாக பிரயோகிக்கத் தொடங்கினார். அதே நேரத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலும், எதிர்காலத்தில் இலங்கையில் ஐ.தே.க. எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று பதவிக்கு வர முடியாத வகையிலும் அரசியல் அமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தனர்.

இவற்றுக்கும் அப்பால் இன்னொரு நடவடிக்கையையும் ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டது. அதாவது தமது பிரதான எதிரியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வர முடியாத வகையில் அதன் முன்னாள் அரசாங்கத் தலைவர்கள் மீது பல பொய் வழக்குகள் போடப்பட்டன. அது மாத்திரமின்றி, பாசிசப் புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டுச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான பயங்கரவாத இயக்கத்திடமிருந்து மீட்டெடுத்த படையினர் மீது தண்டனைகள் விதிக்கவும் ரணில் அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் அரசாங்கத்தில் அங்கம் வகித்த இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலும் நாளுக்குநாள் மோதல் போக்கை வளர்த்துச் சென்றது. மறுபக்கத்தில் ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத – தேச விரோத செயற்பாடுகள் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் கோபாவேசத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது. மக்கள் தமது வெறுப்பை அரசாங்கத்தால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு பின்னர் 2018 பெப்ருவரி 10இல் நடத்திய உள்ளூராட்சி தேர்தலில் வெளிப்படுத்தினர். இந்தத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்தின் இரண்டு பங்காளிக் கட்சிகளான ஐ.தே.கவையும், சுதந்திரக் கட்சியையும் தோற்கடித்து, புதிதாக உருவான சிறீலங்கா பொதுஜன பெரமுனவை அமோகமாக வெற்றிபெற வைத்தனர்.

பொதுஜன பெரமுனவின் இந்த அமோக வெற்றி, ஐ.தே.கவும் அதனது சர்வதேச எசமானர்களும் எதிர்பார்க்காத ஒன்று. எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டையும் தோற்கடித்து பொதுஜன பெமுரனதான் வெற்றிவாகை சூடும் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டது. அதே நேரத்தில் இந்த வளர்ச்சிப் போக்குத்தான் ஜனாதிபதியினதும் அரசுடன் இணைந்திருந்த ஒருபகுதி சுதந்திரக் கட்சியினரதும் கண்களையும் திறக்க உதவியது. அதாவது அரசியல்வாதிகள் செய்ய முடியாத மாற்றத்தை மக்கள் சக்தியே உருவாக்கியது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சி அணியினரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான சுதந்திரக் கட்சி (சிறீலங்கா பொதுஜன பெரமுன என்ற பெயரில் செயல்பட்டு வந்த) அணியினரும் மீண்டும் ஒன்றிணையும் சூழல் உருவானது. இந்த நிலைமை உருவாவதைப் பொறுக்காத சக்திகள்தான் ஜனாதிபதியைளயும், ராஜபக்ச குடும்பத்தினரையும் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டினர்.

நாடு இப்படியான ஒரு அபாயகரமான சூழலை எதிர்கொண்ட பின்னரே ஜனாதிபதி மைத்திரி அவசரம் அவசரமாக ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தார். இது ஒரு தற்காலிகத் தீர்வுதான் என்று கருதிய ஜனாதிபதி, நாட்டில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்கும் பொருட்டு மக்களிடம் ஆணை கேட்டுச் செல்வதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்தார்.

ஆனால் மைத்திரி நாட்டைக் காப்பாற்ற எடுத்த இந்த அதிரடி நடவடிக்கைகள் இரண்டு பாரிய தடைகளைச் சந்தித்தது.

ஒன்று, நாடாளுமன்றத்தில் இருந்த பல வகையான பிற்போக்கு சக்திகளை வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் ஐ.தே.கட்சியால் திரட்ட முடிந்ததால், புதிய பிரதமர் மகிந்தவால் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை.

இரண்டாவது, ஐ.தே.க. தலைமையிலான சக்திகள் நீண்ட நோக்குடன் இப்படியான ஒரு நிலைமை உருவாகலாம் எனக் கணித்து 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதால், நாடாளுமன்றக் கலைப்புக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துவிட்டது.

ஆனாலும், இந்த அரசியல் நெருக்கடி அரசியல் காரணங்களால் உருவானது என்பதே உண்மையாகும். எனவே அதை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதுதான் முறை.

அப்படிப் பார்த்தால், புதிதாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி மக்களிடம் புதிதாக ஆணை பெறுவதொன்றே இதற்கான தீர்வாகும்.

அதை விடுத்து நாடாளுமன்றத்தில் விலைக்கு வாங்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமும், பிற்போக்கு அரசியல் நோக்கங்கள் மூலமும் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையைக் காட்டி வலுக்கட்டாயமாக ஆட்சியைத் தொடர்வதற்கு ஐ.தே.கட்சிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அதுமட்டுமல்ல, பெரும்பான்மை பலம் என்று பார்த்தாலும் கூட இன்று எதிரணியில் இருக்கும் பொதுஜன பெரமுனையும், சுதந்திரக் கட்சியும் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவை நான்கில் மூன்று பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்திருக்கின்றன. எனவே, புதிதாக மக்கள் தீர்ப்பைப் பெறுவதுதான் இன்றைய அரசியல் நெருக்கடி தீர்வதற்கான ஒரே வழியாகும்.

ஒரு தனி மனிதனின் கையில் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை விட, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருக்கும் சட்டவாக்க அதிகாரத்தை விட, விரல் விட்டெண்ணக்கூடிய நீதிபதிகளின் சட்ட வியாக்கியான அடிப்படையிலான தீர்ப்புகளை விட, இலங்கையின் இரண்டு கோடி மக்களினால் ஜனநாயக முறைப்படி நடத்தப்படும் தேர்தல் ஒன்றில் வழங்கப்படும் தீர்ப்புதான், ஜனநாயக ரீதியானதும், இறையாண்மை மிக்கதும், தேசப்பற்று மிக்கதுமாகும்.

எனவே, 'நாடு பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்' என அனைத்து மக்களும் ஏகோபித்து குரல் எழுப்ப வேண்டும்.

**5ம் பக்கத்தொடர்ச்சி....**

தலைவர்கள், கல்விமான்கள், பொது அமைப்புகள் என்பனவும் வரவேற்றனர். ஆனால் ஐ.தே.க. ஜனாதிபதியின் ஜனநாயக பூர்வமான, நீதியான இந்த நிலைப்பாட்டை எதிர்த்ததுடன், தனது கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் மூலம் நாடாளுமன்றச் செயற்பாடுகளையும் சீர்குலைத்தது. இதனால் நாடு பெரும் அரசியல் குழப்பத்தில் ஆழ்ந்தது. நாட்டில் இரண்டு மாதங்களாக ஏற்பட்டிருந்த குழப்ப நிலையைப் பார்த்த பொதுமக்களும், ஜனநாயக விரும்பிகளும் இந்தப் பிரச்சினைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதானால் பொதுத் தேர்தல் ஒன்றுதான் ஒரேவழி என்ற முடிவுக்கே வந்தனர்.

இந்த நிலையில்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பெரும்பான்மையான நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக வந்துள்ளது. இது தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளின் தவறல்ல. அவர்கள் நாட்டின் அரசியல் நிலைமைகளை அல்லது மக்களின் விருப்பத்தை அடிப்படையாக வைத்துத் தீர்ப்புகளை வழங்குவதில்லை. நாட்டின் அரசியல் அமைப்பின் பிரகாரமும், அதன் அடிப்படையிலான சட்டங்களின் பிரகாரமுமே அவர்களால் நீதிமன்றத் தீர்ப்புகளை வழங்க முடியும்.

எல்லா நாடுகளிலும் அரசியல்வாதிகளே சட்டங்களை இயற்றுகிறார்கள். சட்டங்களை இயற்றும் அரசியல்வாதிகள் சில நோக்கங்களின் அடிப்படையிலேயே அதை ஆக்குகிறார்கள். ஒரு சட்டம் இயற்றப்பட்ட பின்னர் அதை மதித்து ஒழுக வேண்டிய கடமை எல்லாத்தரப்பு மக்களுக்கும் – பொதுமக்கள், அரச ஊழியர்கள், அரசியல்வாதிகள், நீதித்துறையினர் எல்லோருக்கும் கட்டாயமானதாகும்.

எனவே இலங்கையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அவ்வாறே அமைந்துள்ளது. அந்தத் தீர்ப்பு மக்களின் எதிர்பார்ப்புக்கு விரோதமாக இருந்தாலும் அதற்கு மதிப்பளிக்க வேண்டியது கடமை மட்டுமின்றி, கட்டாயமானதுமாகும்.

தற்போதைய சட்டம் சரியில்லை என மக்கள் கருதினால், நான்கரை ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருந்து, அதன் பின்னர் நடைபெறும் பொதுத் தேர்தலில் சரியான பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, அவர்கள் மூலம் மக்கள் சார்பான சட்டங்களை இயற்ற வைப்பதே மக்களுக்கு முன்னாலுள்ள ஒரே தீர்வாகும்.

# சுமந்திரனின் நிகழ்ச்சி நிரலில் தமிழ் கூட்டமைப்பு செயல்படுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம்!

## பிரபா கணேசன் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று களமிறங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது வாக்குகளால் வரமளித்திருந்தனர். ஆனால் அந்த வரத்தினை இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பது கேள்விக்குறியாகியுள்ளது என முன்னாள் பிரதியமைச்சரும், ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவரும், அமைச்சர் மனோ கணேசனின் சகோதரருமான பிரபா கணேசன் அறிக்கை ஒன்றை விடுத்து கேள்வி எழுப்பியிருக்கிறார்.

நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினை தீர்வு ஒன்றையே முன்வைத்து அதனைப் பெற்றுக் கொடுப்பதாக கூறியே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்குகளைக் கோரியிருந்தனர். அவர்கள் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் இன்று அவர்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பற்றி சற்றும் சிந்திக்காமல் கூட்டமைப்பின் புதிய தலைவர் போல் செயல்படும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயல்படுவது வடக்கு கிழக்கில் அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும்.

நாட்டில் கடந்த ஒன்றரை மாதமாக இடம்பெற்ற சிங்கள அரசியல் தலைவர்களின் பதவி ஆசைச் சண்டையினை வேடிக்கை பார்ப்பதை



விடுத்து ஒரு பக்கம் சார்பாக ஜனநாயகத்தை நிலைநிறுத்துவோம் என்ற அடிப்படையை காரணமாக வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் செயல்பட்டது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்குத் தேவைதானா என்பதை கூட்டமைப்பினர் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமின்றி, மகிந்த ராஜபக்ச அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக வருவதையும் தடுக்கும் முகமாக அவருக்கு எதிரான செயல்பாடுகளை முன்னெடுத்து வருவது தமிழ் மக்களுக்கு அபாயமானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கை தமிழ் மக்களின் பிரச்சினை வேறு, வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்பதைப் புரிந்து கொள்ளாமல் செயல்படுவது தவறான விடயமாகும். சிங்கள மக்களின் மனநிலை நாளுக்கு நாள் மாறுபட்டு வருகிறது. இன்னும் ஒன்றரை வருடங்களில் அவர்கள் மகிந்த ராஜபக்சவை சில சமயம் நாட்டின் தலைவராகத் தெரிவு செய்வார்களாயின் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வினை இவர்கள் எந்த முகத்தினை வைத்து அவரிடம் பேசக்கூடியதாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய கூட்டமைப்பினர் எதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு என்ன நிபந்தனையுடன் ஆதரவு வழங்கினார்கள் என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் எமது தமிழ் இனத்துக்கு செய்யப்பட்டவை அத்தனையும் துரோகங்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த செயல்பாடுகளுக்கு துணை சென்ற ரெலோ, புளொட் அமைப்புகளின் தலைவர்களும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொழும்பு – 7இல் வசிக்கும் யாழ் மாவட்ட மேல்குடி கட்சியாக மாறியிருப்பதை பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட தமிழர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநிறுத்துகிறோம் என்ற பெயரில் தமது மக்களின் வாக்குகளால் பெற்ற வரத்தின் ஊடாக சிங்கள இனவாதிகளின் பக்கம் சார்ந்து செயல்பட்டு தமது இருப்பை இழந்து நிற்கும் கூட்டமைப்பினர் எதிர்வரும் தேர்தலில் மக்களிடம் எதனைச் சொல்லி வாக்குகளைப் பெறப் போகிறார்கள் என்பதற்கு காலம் பதில் சொல்லும்.

இவ்வாறு பிரபா கணேசன் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

---

**4ம் பக்கத்தொடர்ச்சி....**

இருக்கலாம் என தமிழ் தேசியவாத சக்திகளும், சில தமிழ் ஊடகங்களும் ஊகம் வெளியிட்டு வருகின்றன.

மறுபுறத்தில், இந்த எலும்புக்கூடுகள் புலிகளால் கொல்லப்பட்டவர்களினதாக இருக்கலாம் என்ற ஊகங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அதைத் தெரிவிப்பவர்கள் முன்வைக்கும் வாதம் இதுவரை காலமும் புலிகளால் சுமார் 30,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் பெரும்பான்மையானோரின் சடலங்களை புலிகள் என்ன செய்தார்கள் என்பது பற்றி விபரங்கள் கிடைக்கவில்லை என்பதுமாகும்.

அத்துடன், புலிகளால் பிடிக்கப்பட்டு அவர்களது சித்திரவதை முகாமுக்கு கொண்டு செல்லப்படுபவர்கள் அனைவருக்கும் தப்பி ஓடாதவாறு கால்களில் சங்கிலி இடப்படுவது வழமை என்றும் அவர்களது சித்திரவதை முகாம்களில் இருந்து தப்பி வந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் 30 வருடங்களாக அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரில் அண்ணளவாக ஒரு இலட்சம் பேர்வரை மரணித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களில் பெருமளவானோரின் சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட போதும், ஒரு கணிசமான தொகையினருக்கு என்ன நடந்ததென்று இதுவரை தெரிய வரவில்லை. அப்படி இனம் தெரியாமல் மரணித்தவர்களில் ஒரு பகுதியினரின் எலும்புக்கூடுகளே மன்னாரில் மீட்கப்படுபவை என நம்பப்படுகிறது.

# இப்பொழுதும் ரணிலை பிரதமராக நான் ஏற்கவில்லை!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு!!

“ரணில் விக்கிரமசிங்கவை தற்போதும் பிரதமராக ஏற்றுக்கொள்ள நான் தயாரில்லை”

இவ்வாறு கூறியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிதமராக நியமித்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

“நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மற்றும் ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்குத் தீர்மானித்தேன்.

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் கையொப்பமிட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க மாட்டேன் என்று கூறியிருந்தேன். அது எனது தனிப்பட்ட அரசியல் கருத்தாகும். அதே கருத்துடன்தான் இன்றும் இருக்கின்றேன்.

பிரதமர் ஒருவரைத் தீர்மானிப்பதற்கோ அல்லது நியமிப்பதற்கோ அரசியல் அமைப்புக்கு இணங்க நாடாளுமன்றத்திற்கோ நீதிமன்றத்திற்கோ எவ்வித அதிகாரமுமில்லை. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு மட்டுமே அந்த அதிகாரம் உள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்தல், நாடாளுமன்ற அமர்வுகளை நிறைவு செய்தல், பிரதமரை பதவி நீக்குதல், பிரதமரை நியமித்தல் உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்ட போது, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல், நாட்டிலுள்ள மிக உயர்



நீதித்துறை நிபுணர்களின் அறிவுரைகளைப் பெற்றே செயற்பட்டேன்.

தாய்நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் நோக்கிலேயே சில முக்கிய தீர்மானங்களை எடுத்தேன். அரசியலமைப்பை மீறிச் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் ஒருபோதும் இருந்ததில்லை. தற்போதுள்ள அரசியல் பிரச்சினைக்கு ஒரேயொரு சிறந்த தீர்வு பொதுத் தேர்தல் ஆகும் என நான் நம்புகிறேன். அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டமை ஒரு நல்ல விடயமாயினும் அது அரசியல் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடிகளுடன் தொடர்பு பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதோடு மட்டுமல்லாது அவர்களிடமிருந்து குறித்த பணத்தை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்திற்கு தேவையான இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சட்டமூல திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படாமை, நாடாளுமன்ற அமர்வுகள் பிற்போடப்பட்டமை போன்ற விடயங்களும் 19ஆவது அரசியல் திருத்தத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளே”

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரி தனது உரையில் குறிப்பிட்டார்.

# காலஞ்சென்ற எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களுக்கு அஞ்சலி

தமிழ் இலக்கியத்துறையில் 57 ஆண்டுகளாக பணியாற்றி வந்த பிரபல எழுத்தாளர் பிரபஞ்சன் புற்றுநோய் காரணமாக சிகிச்சை பலனின்றி 21.12.2018 இல் புதுச்சேரியில் (பாண்டிச்சேரி) காலமானார். புதுச்சேரியில் ஏப்ரல் 27, 1942ம் ஆண்டில் பிறந்த இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். தமிழ் இலக்கியத்துறையில் 57 ஆண்டுகளாக பணியாற்றி வந்த பிரபஞ்சன் 46 புத்தகங்களை எழுதியுள்ளார். இவரது படைப்புகள் தெலுங்கு, இந்தி, ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்ற, ‘வானம் வசப்படும்’ என்ற அவரது நாவலுக்காக, 1995 ஆம் ஆண்டு மத்திய அரசு தமிழின் சாத்திய அகாடமி விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது. காலஞ்சென்ற எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களுக்கு ‘வானவில்’ தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.